திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி அவர்கள் சொன்ன சொற்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், ** என்ற மறுப்பை அவர் தெரிவிக்கவில்லை. அவர் மறுப்பைத் தெரிவித்ததற்குப் பின்னால் அந்த வார்த்தைகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அப்படிக் கிடையாது. He is wrong. He is making a wrong statement. That is why I request the Hon'ble Speaker to expunge his speech.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-4-2010) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

93. மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 28

94. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு செலவு செயலாக்கத் திட்டம், *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

95. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

96. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011.* (தமிழ்)

97. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011.* (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS